பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

லாலா நீல சோப்
புதிய மூலப்பொருட்களை கொண்டு நவீன முறையில் தயாரிக்கப்பட்டு
புதிய உருவில் விற்பனையாகிறது.
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

# ஈழநாடு
# The EELA NADU

கோப்பி போன்று பாவிக்க
சோயாற்றின்
"சோயாற்றின்" உங்கள் களைப்பை நீக்குவதோடு தேக ஆரோக்கியத்தையும், நிறைவான புரதச்சத்தையும் தரவல்லது.
அண்ணா
தொழிலகம்
இணுவில்.
தொலைபேசி: 7412

மலர்: 19 ஆடி 7 ஷஃபா: 5 இதழ்: 161
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-7-77

# யு. என். பி. பெருவெற்றி
# வடக்கில் கூட்டணி!



## அமிர், சிவா, ராஜலிங்கம், யோகேஸ் வெற்றி

## மந்திரிகள் பலர் தோல்வி





இலங்கை குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டபின் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் புதிய குடியரசு அமைப்பை எதிர்த்து வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி வடக்கில் சகல தொகுதிகளிலும் அமோக வெற்றியீட்டியது. கிழக்கு மாகாணத்தில் சில தொகுதிகளில் மட்டுமேஅதுவெற்றியிட்டக்கூடியதாயுள்ளது.

தென்னிலங்கையில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைத் தலைவராகக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி அமோகவெற்றியீட்டிக்கொண்டிருக்கிறது. 1956-ம் ஆண்டுத் தேர்தலின்போது தேர்தல் முடிவுகள் வெளிவந்துகொண்டிருந்ததுபோல் இத்தேர்தல் முடிவுகளும் ஐக்கிய தேசியக்கட்சிவேட்பாளர்களின் பெயர்களே வெற்றியீட்டியவர்கள்என்ற அறிவிப்பே வந்துகொண்டிருக்கின்றன. திரு.ஜே. ஆர்.ஜெயவர்த்தன பிரதமராகப்பதவியேற்பார் என்பது நிச்சயமாகி விட்டதென்பது அரசியல்வட்டாரங்களின் நம்பிக்கை.

### 47-ம் ஆண்டின் சாதனை

1947-ம் ஆண்டில் அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டு மிகப் பெரும்பான்மைப்பலத்துடன்வெற்றியீட்டியபின்னர் அதே அளவு மிகப்பெரும்பான்மையான வாக்குகளைப்பெற்று சாதனை நிலைநாட்டியிருப்பது இப்போது திரு. வெ. யோகேஸ்வரன்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

### வடக்கில் பலர் படுதோல்வி

வடக்கில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றியீட்டினர். இவர்களுடன் போட்டியிட்ட பல வேட்பாளர்கள் படுதோல்வியடைந்தனர். தமது கட்டுப்பணத்தையும் இழந்தனர்.

### பல மந்திரிகள் தோல்வி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த திரு. கே. பி. இரத்நாயக்கா, திரு. செ குமாரசூரியர், பிரதி அமைச்சர்கள் திரு. ரத்னேதேசப்பிரிய சேனநாயக்கா, திரு. எச். நவரத்தின உட்படப் பலர் தோல்வியடைந்தனர்.



### செல்லச்சாமி வெற்றி

கொழும்பு மத்திய தொகுதியில் இ. தொ. காங்கிரசைச் சேர்ந்த திரு. எஸ். எம். செல்லச்சாமி மூன்றாவது பிரதிநிதியாக வெற்றியீட்டியிருப்பதாகக் கொழும்பிலிருந்து கிடைத்த ஊர்ஜிதமற்ற செய்தியொன்று கூறுகிறது.

முதலாவது தேர்தல் முடிவு இன்று அதிகாலை ஒருமணி நாற்பத்தொரு நிமிடமளவில் வானொலியில் அறிவிக்கப்பட்டது. புதிய தேர்தல் தொகுதியான சம்மாந்துறை தேர்தல்முடிவே முதலில் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மற்றுமொருபுதிய தேர்தல் தொகுதியான கரந்தெனிய தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. இன்று காலை 6-15வரை மொத்தம் 51 தொகுதிகளின் முடிவுகளே (வானொலிமூலம்) அறிவிக்கப்பட்டன.

### மட்டக்களப்பு முடிவு இன்று மூற்பகல் தெரியும்

### காசி அலுவலகத்துக்கு குண்டு வீச்சு

மட்டக்களம்பு, வெள்ளி மட்டக்களப்புத் தொகுதி வாக்குகள் அதிகாலைக்குப் பின்னரும் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. இத்தொகுதியின் தேர்தல் முடிவுகள் இன்று முற்பகல் பத்து மணியளவில்தான் வெளிவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று மாலை வாக்களிப்பு முடிந்த சிறிது நேரத்தில் கவிஞர் காசிஆனந்தனின் அலுவலகத்தின் மீது எறிகுண்டு ஒன்று வீசப்பட்டதாகவும் இதனால் கட்டிடத்துக்குச் சிறிது சேதம் ஏற்பட்டதேயொழிய எவருக்கும் காயமேற்படவில்லை யென்றும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பில் வன்செயல்கள் அதிகரித்துள்ளதால் இராணுவம் அழைக்கப்படலாமென்றும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

———

#### றிவால்வரைக் காட்டி பயமுறுத்தினராம்

வாக்களிப்பு நிலையமொன்றில் தனது ஏஜண்டாகக் கடமையாற்ற இருந்த ஒருவரை நேற்றுக்காலை சிலர் றிவால்வர் காட்டிப்பயமுறுத்தி, அவரிடமிருந்த முக்கிய பத்திரங்களைப் பறித்துக்கொண்டனர் என்றும், இச்சம்பவம்பற்றி குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தின் தேர்தல் அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டு அவருக்குப் பதிலாக வேறு ஒரு ஏஜண்ட் நியமிக்கப்பட்டதாகவும் இது குறித்து பொலிஸாருக்கு தாம் முறைப்பாடு செய்யவில்லை என்றும் நல்லூர் தொகுதியில் சுயேச்சையாகப்போட்டியிட்ட திரு. ராஜராஜேஸ்வரன் தங்த்ராஜா 'ஈழநாடு'க்கு தெரிவித்துள்ளார்.

# வடக்கு, கிழக்குத் தொகுதி முடிவுகள்

## 79 -- ஊர்காவற்றுறை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள்– | | 36372 |
| கே. பி. இரத்தினம் | த.வி.கூ. | 17,640 |
| வி. நவரத்தினம் | சுயேச்சை | 8,673 |
| எம். அமிர்தலிங்கம் | ஐ. தே. க. | 661 |
| வை. துரைசாமி | சுயேச்சை | 279 |
| தம்பையா பரநிருபசிங்கம் | சுயேச்சை | 185 |
| கே. கனகரத்தினம் | ல. ச. ச. க | 103 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | 132 |
| | அதிகப்படி | 8,967 |

## 82 -- மானிப்பாய்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள்– | | 41,373 |
| வி. தர்மலிங்கம் | த. வி. கூ. | 27,550 |
| ஆர்.எஸ்.அலோசியஸ் | ஐ. தே. க. | 3,500 |
| இ. பொ. வ. மா. க முதலியார் | சுயேச்சை | 1,065 |
| க. க. இரத்தினவேல் | சுயேச்சை | 887 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | ........ |
| | அதிகப்படி | 24,050 |

## 85 -- பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள்– | | 28,447 |
| க. துரைரத்தினம் | த. வி. கூ. | 12.989 |
| ந. நடராசா | சுயேச்சை | 6,419 |
| மு. பொ. வீரபாகு | சுயேச்சை | 3,065 |
| கே. ரி. இராசசிங்கம் | சுயேச்சை | 614 |
| க. சி. முத்துக்குமாசாமி | சுயேச்சை | 204 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | 75 |
| | அதிகப்படி | 6,570 |

## 91 -- முல்லைத்தீவு

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 24698 |
| சே. மா. செல்லத்தம்பு | த. வி. கூ. | 10,261 |
| பொ. சந்திரசேகரி | சுயேச்சை | 7,632 |
| இரா. விக்னராசா | சுயேச்சை | 977 |
| வே. சந்திரசேனன் | சுயேச்சை | 726 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | ........ |
| | அதிகப்படி | 2,629 |

## 92 -- வவனியா

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 28450 |
| தா. சிவசிதம்பரம் | (த. வி. கூ) | 13,281 |
| கா. புலேந்திரன் | ஐ. தே. க. | 9,444 |
| யு சுபசிங்க | சுயேச்சை | 151 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | ........ |
| | அதிகப்படி | 4377 |

## 100 -- சம்மாந்துறை

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர்: | | 27308 |
| எம். ஏ. அப்துல்மஜீத் | ஐ.தே.க | 13,642 |
| எச். எல். எம். ஹாசிம் | த. வி. கூ. | 8,615 |
| அப்துல் ஜபார் | ஸ்ரீ.ல.சு.க. | 2,605 |
| பதிவானவை | | ........ |
| பழுதானவை | | ........ |
| அதிகப்படி | | 5,027 |

## 101 -- கல்முனை

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 28829 |
| மன்சூர் | ஐ.தே.க | 12,636 |
| ஏ. எம். சம்சுதீன் | த. வி. கூ. | 7,093 |
| ஏ. முகமது காசீம் | ஸ்ரீ. ல. சு. க. | 5,922 |
| துரையப்பா முத்துக்கிருஷ்ணன் | சுயேச்சை | 253 |
| பழுதானவை | | ........ |
| அதிகப்படி | | 5,543 |

## 86 -- சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 36954 |
| வி. என். நவரத்தினம் | த.வி.கூ. | 20,028 |
| வே. குமாரசாமி | சுயேச்சை | 10,810 |
| சி. பொ. மயில்வாகனன் | சுயேச்சை | 419 |
| கந்தையா ஆசை ஜெரோம் | சுயேச்சை | 288 |
| சதாசிவம் நடராசா | சுயேச்சை | 111 |
| | பதிவானவை | 31748 |
| | பழுதானவை | 091 |
| | அதிகப்படி | 9,218 |

## 96 -- கல்குடா

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 33995 |
| கே. டபிள்யூ. தேவநாயகம் | ஐ. தே. க | 13,140 |
| சி. சம்பந்தமூர்த்தி | த. வி. கூ | 12,595 |
| ஏ. எச். மாச்சான் மாக்கார் | சு. க. | 3,507 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | ........ |
| | அதிகப்படி | 545 |

## 93 -- சேருவில்

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 31250 |
| எச். டி. எல் லீலாரட்ன | ஐ. தே, க. | 14,926 |
| பிரேமதாஸ உடகம | ஸ்ரீ ல. சு. க. | 10,567 |
| பென்ஸ் ஹெற்றி ஹேவா | ல. ச. ச. க. | 392 |
| விக்டர் பெரேரா | ம. ஐ. மு. | 52 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | ........ |
| | அதிகப்படி | 4359 |

## 94 -- திருகோணமலை

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 35778 |
| இரா. சம்பந்தன் | த. வி. கூ. | 15,144 |
| வி. ஆர். நவரட்ணராசா | (ஐ.தே.க) | 11824 |
| எஸ். தவராசா | ஸ்ரீ.ல.சு. க. | 1,673 |
| குணதாச வரிணசூரிய | சுயேச்சை | 565 |
| ஈ. ஜே. ஏ, பி. பேபிசிங்க | சுயேச்சை | 54 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | ........ |
| | அதிகப்படி | 3321 |

## 81 -- காங்கேசன்துறை

| | | |
|---|---|---|
| பதிவானவை | - | 36695 |
| அ. அமிர்தலிங்கம் | த. வி. கூ. | 31155 |
| சிவஸ்ரீதரன் | சுயேச்சை | 5322 |
| | அதிகப்படியானவை | 25833 |
| | பழுதானவை | 218 |

## 90 -- மன்னார்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | | 31767 |
| பி. எஸ். சூசைதாசன் | த. வி. கூ. | 15,141 |
| எம். எஸ். அப்துல்ரஹீம் | ஐ. தே. க. | 12,929 |
| ஜோன் மாரிக் | சுயேச்சை | 663 |
| எச். எஸ். தாவூத் | ஸ்ரீ.ல.சு. | 478 |
| எம். கந்தசாமி | சுயேச்சை | 141 |
| பெரும்பான்மை | | 2,212 |

## 80 -- வட்டுக்கோட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள்– | | 40684 |
| தா. திருநாவுக்கரசு | த. வி. கூ. | 23,384 |
| ஆ. தியாகராசா | சுயேச்சை | 5,176 |
| வி. இரட்டாய் | சுயேச்சை | 3,187 |
| வை. இராசசுந்தரம் | சுயேச்சை | 837 |
| என். இரத்தினசிங்கம் | ஐ. தே. க. | 480 |
| வி. தர்மலிங்கம் | சுயேச்சை | 150 |
| எம். அம்பலவாணர் | சுயேச்சை | 107 |
| | பழுதானவை | 135 |
| | பதிவானவை | 33,464 |
| | அதிகப்படி | 18,208 |

## 88 -- யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 34865 |
| வெ. யோகேஸ்வரன் | த. வி. கூ. | 16,251 |
| ஜி. ஜி. பொன்னம்பலம் | சுயேச்சை | 6,960 |
| அ. வி. ஏபிரகாம் | சுயேச்சை | 4,349 |
| சி. எக்ஸ். மார்ட்டின் | சுயேச்சை | 900 |
| ஏ. ஜி. ராஜசூரியா | சுயேச்சை | 164 |
| ஆ. தர்மலிங்கம் | சுயேச்சை | 77 |
| | பதிவானவை | 28,779 |
| | பழுதானவை | 78 |
| | அதிகப்படி | 9291 |

மூவர் கட்டுப்பணம் இழந்தனர்

## 83 -- கோப்பாய்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் - | | 41824 |
| சி. கதிரவேலுப்பிள்ளை | த. வி. கூ. | 25,840 |
| வ. நடராஜா | ல. ச. ச. க. | 3.487 |
| த. ஜெயநாதன் | ஐ. தே. க. | 2699 |
| வ. த. ஜெகதேவன் | சுயேச்சை | 1444 |
| | பதிவானவை | 33619 |
| | பழுதானவை | 149 |
| | அதிகப்படி | 22,353 |

மூவர் கட்டுப்பணம் இழந்தனர்,

## 95 -- மூதூர்

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 30389 |
| எம். ஈ. எச். மஹ்ரூப் | ஐ. தே. க. | 12,530 |
| ஏ. எல். அப்துல்மஜீத் | ஸ்ரீ.சு. க. | 7,800 |
| எஸ். எம். மக்கீன் | த. வி. கூ. | 7,520 |
| | பதிவானவை | ........ |
| | பழுதானவை | ........ |
| | அதிகப்படி | 4,730 |

## 89 -- கிளிநொச்சி

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 26670 |
| வி. ஆனந்தசங்கரி | த. வி. கூ. | 15,607 |
| சி. குமாரசூரியர் | சு. க. | 4006 |
| நா. கனகசூரியர் | ஐ. தே. க | 1497 |
| திருமதி இ. ஞானசங்கரி | சுயேச்சை | 76 |
| சின்னத்தம்பி கணேசு | சுயேச்சை | 72 |
| | பதிவானவை | 21314 |
| | பழுதானவை | 56 |
| | அதிகப்படி | 11,601 |

மூவர் கட்டுப்பணம் இழந்தனர்

### 65 காலி

| | | |
|---|---|---|
| அல்பேர்ட் டி சில்வா | ஐ. தே. க. | 15,861 |
| டபிள்யூ. தஹநாயக்கா | சுயேச்சை | 10,852 |
| குலதிலகா | ஸ்ரீ ல. சு. க | 6,448 |
| மன்சூர் | ல. ச. ச. க | 4314 |
| | பெரும்பான்மை | 5080 |

### 47 ஹேவாஹெற்ற

| | | |
|---|---|---|
| அனுராடானியல் | ஐ. தே. க. | 17 355 |
| பியசேன தென்னக்கூன் | ஸ்ரீல. சு. க. | 10,605 |
| விக்கிரமரதன | ல ச. ச. க | 352 |
| | பெரும்பான்மை | 6,750 |



வ. ந. நவரத்தினம்

### 135 பதுளை

| | | |
|---|---|---|
| வின்லென்ட் டயஸ் | ஐ. தே. க. | 10,409 |
| பண்டார | ஸ்ரீ. ல. சு. க. | 6,703 |
| சாள்ஸ் சேனநாயக்க | ல. ச. ச. க. | 1320 |
| மிஸ்கின் | சுயேச்சை | 103 |
| | பெரும்பான்மை | 3,706 |

### 49 மகாநுவர

| | | |
|---|---|---|
| ஈ. எல். சேனநாயக்க | ஐ. தே. க. | 14,154 |
| எச். எம் நவரத்ன | ஸ்ரீ ல. சு. க. | 7,043 |
| ஜி. பி. டி. சில்வா | சுயேச்சை | 673 |
| எஹலிபொல | ம. ஐ. மு | 36 |
| | பொரும்பான்மை | 7,111 |

### 43 பாததும்பற

| | | |
|---|---|---|
| வீரபிட்டிய | ஐ. தே. க. | 19,936 |
| பெர்ஞண்டோ | ஸ்ரீ ல. சு. க. | 9,439 |
| ஜெயசிறி பெரேரா | கம்யூனிஸ் | 771 |
| | பெருப்பான்மை | 10,497 |



எக்ஸ்.எம்.செல்லத்தம்பு

### 136 ஆலிஎல

| | | |
|---|---|---|
| ஆர். எம் அபயக்கூன் | [ஐ தே க] | 12,846 |
| விஜயரத்ன பண்டா | ]ஸ்ரீல சு க] | 8,241 |
| வில்சன் | [கம்யூ] | 487 |
| விதானகே | [சுயேச்சை] | 187 |
| | பெரும்பான்மை | 4,605 |

### 46- குண்டசாலை

| | | |
|---|---|---|
| டி. எம். சந்திரபால | (ஐ.தே.க. | 18,918 |
| ஜினதாச | (ஸ்ரீ, ல. சு. க.) | 11,732 |
| உதயசேனநாயக்கா | (ல. ச. ச. க.) | 392 |
| | பெரும்பான்மை | 7,186 |

### 112 வாரியபொல

| | | |
|---|---|---|
| அமராவதி பியசீலிரத்ஞயக்க | ஐ தே. க. | 18,311 |
| பியதாசவிஜேசிங்க | ஸ்ரீலங்க | 14,221 |
| நறசிங்க | ல. ச. ச. க. | 155 |
| செனிவரத்ன | சுயே | 110 |
| பெரும்பானமை | | 4090 |

### 99 அம்பாறை

| | | |
|---|---|---|
| பி.தயரத்ன | ஐ.தே.க. | 24581 |
| சோமரத்ன செனரத் | ஸ்ரீ ல. சு. க. | 16009 |
| சீலரத்னடி சில்வா | ல. ச. ச. க. | 945 |
| பெரும்பான்மை | | 8,572 |

### 60- கரந்தெனிய

| | | |
|---|---|---|
| பந்துலஹேவ சேனதீர | ஐ.தே க | 17,790 |
| வில்சன் விஜயதுங்க | ஸ்ரீ.ல.சு.க. | 12,857 |
| ஹென்றி வில்சன் | சுயே | 950 |
| பிருன்சிஸ் துடாவ | சுயே | 274 |
| பீனிகஹன தத்ததிஸ தேரோ | சுயே | 198 |
| ஆனந்த விஜேரத்ன | சுயே | 138 |
| | பெரும்பான்மை | 6,903 |

### 20- களனி

| | | |
|---|---|---|
| சிறில் மத்தேயூ | ஐ தே.க. | 23,477 |
| எறின் சேனநாயக்க | ஸ்ரீ ல. சு. க. | 16,958 |
| பண்டித | கம்யூ. | 1,076 |
| செனிவரத்ன | சுயேச்சை | 162 |
| ஜயசேகர | ம. ஐ.மு. | 65 |
| சில்வா | சுயே | 45 |
| பெரேரா | சுயே | 29 |
| | பெரும்பான்மை | 6,519 |



வி. தர்மலிங்கம்

### 127 மிகுந்தலை

| | | |
|---|---|---|
| தயாரத்தின வாலசம்பாகு | ஐ. தே. க. | 10,839 |
| பத்திராஜ தென்னக்கூன் | ஸ்ரீல. சு க. | 8,006 |
| ரத்னயக்கா | ல. ச. ச. | 385 |
| குமாரசேகரா | சுயேச்சை | 156 |
| எம். தென்னக்கூன் | சுயேச்சை | 92 |
| ராஜகருண | சுயேச்சை | 78 |
| விஜயதிசநாயக்க | சுயேச்சை | 29 |
| | பெரும்பான்மை | 2,833 |

### 41- கலகெதர

| | | |
|---|---|---|
| டபிள்யு.ரி.டி.பண்டா | ஐ.தே.க. | 17,092 |
| தாமரகுமாரி இலங்கரத்ன | ஸ்ரீ.ல.சு க. | 11,219 |
| விமலசிறி அழகக்கோன் | ல.ச.ச.க. | 148 |
| | பெரும்பான்மை | 5,873 |

### 8 வத்தளை

| | | |
|---|---|---|
| டி. ஷெல்டன் ஜெயசிங்க | (ஐ தே க) | 26,355 |
| லியோ | (ஸ்ரீ ல சு க) | 14,677 |
| ஜெயக்கொடி | (ல ச ச க) | 625 |
| நெல்சன் பெர்ஞண்டோ | (சுயேச்சை) | 208 |
| றொட்றிக்கோ | (சுயே) | 32 |
| | பெரும்பான்மை | 11,678 |

### 128 கெக்கிராவ

| | | |
|---|---|---|
| ஜி, டி. மகிந்தசோம | ஐ. தே. க. | 11,983 |
| முதியன்சலாகே | சுயே | 6,520 |
| எகநாயக்க | ஸ்ரீ.ல சு.க | 2,436 |
| ஜினதாச | சுயே | 74 |
| பெருப்பான்மை | | 5,463 |

## மொழிக்கொள்கை:

# "மத்திய அரசுடன் ஆலோசிக்காமலே பகிரங்கமாக கருத்து வெளியிடுவதா?"

## எம். ஜி. ஆருக்கு தேசாய் கண்டனம்

சென்னை, ஜூலை 21

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இரு மொழித்திட்டமே தமது அரசால் அமுல்நடத்தப்படும் என்று வெளிப்படையாகக்கூறியிருப்பது குறித்து பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இத்தகைய விஷயங்களை பகிரங்கமாக பேசுவதற்குமுன் மத்திய அரசுடன் ஆலோசித்திருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. எம். ஜி. ஆருக்கு திரு. தேசாய் அறிவுறுத்திருக்கிறார்.



### சட்டசபையில் எம். ஜி. ஆர். பேசியது

தமிழ்நாடு சட்ட சபையில் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். பேசுகையில், இரு மொழிக் கொள்கையே அரசாங்கத்தின் கொள்கையாகத் தொடர்ந்து இருக்கும் என்று கூறியிருந்தார் என்பது தெரிந்ததே.

தமிழ் உத்தியோக மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்கும் என்றும் அவர் கூறியிருந்தார்.

திரு. எம். ஜி. ஆரின் இப்பேச்சு பிரதமர் தேசாய்க்கு கொதிப்பை ஏற்படுத்திவிட்டது.

### மத்திய அரசுடன் பேசிய பின்னரே கருத்து வெளியிட வேண்டும்

இது குறித்து அவர் திரு. எம். ஜி. ஆருக்கு எழுதிய கடிதத்தில் "இப்படியான கருத்துக்களை மாநில அரசு மத்திய அரசுடன் கலந்தாலோசித்த பின்னரே வெளியிடவேண்டும் இது பற்றி எவ்வித ஒளிவு மறைவும் இன்றி மத்திய அரசும் மாநில அரசும் பேசிக் கொள்ளவேண்டும்.

ஆளுநர் மத்திய அரசின் பிரதிநிதி போல் மாநிலத்தில் இருப்பவர் அவர் நிகழ்த்திய உரைமீது முதலமைச்சர் பேசுகையில் இப்படி கூறியிருக்கக் கூடாது" என்று கூறியுள்ளார்.

திரு. எம். ஜி. ஆர். புதுடில்லியில் தம்மைச் சந்தித்து சமீபத்தில் பேசியபோது தமது இக்கருத்து பற்றி தம்மிடம் கூறியிருக்கலமே என்று பிரதமர் கடிதத்தில் திரு. எம். ஜி. ஆருக்கு கூறியுள்ளார்.

சமீபத்தில் திரு. எம். ஜி. ஆர். புதுடில்லி சென்று பிரதமரை சந்தித்து உரையாடிய போது ஹிந்தி திணிக்கப்படமாட்டாது என பிரதமர் அவருக்கு உறுதியளித்ததாக செய்தி வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ)

## சிட்டிபாபுவுக்கு நடந்த சித்திரவதை!

### நீதிபதி முன் மனைவி சாட்சியம்

சென்னை, ஜூலை.21

"சென்னை மத்திய சிறைச் சாலையில் நான் என் கணவரைச் சந்தித்தபோது அவர் சிறை அதிகாரிகளால் தாம் தாக்கப்பட்டதால் தமக்கு ஏற்பட்ட உடல் பாதிப்பை எனக்குக் காட்டினார் அவரது உடலில் வீக்கமும் காணப்பட்டது"

சென்னை மத்திய சிறையில் மிஸா கைதிகளாக வைக்கப்பட்டிருந்தோர் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட புகார்கள் பற்றி விசாரணை செய்யும் பொருட்டு ஒய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஜனப் இஸ்மாயில் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் சிறையில் காலமான திராவிட முன்னேற்றக் கழக மாஜி எம். பி. சிட்டிபாபுவின் மனைவி மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் சொன்னதாவது என் கணவரை சந்திப்பதற்கு பெப்ரவரி 2-ம் திகதிக்குப் பின் எனக்கு அனுமதி கிடைக்க வில்லை.

சிறையதிகாரிகளால் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட உடல் பாதிப்பால் தான் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்பதை கூறமுடியாதிருக்கிறது.

### சித்திரவதையால் நோய் அதிகரித்தது

நீரழிவு நோயாளியான அவருக்கு 1970-ம் ஆண்டில் மாரடைப்பும் ஏற்பட்டது. சிறையில் ஏற்படுத்தப்பட்ட சித்திரவதைகளால்தான் அவரது வியாதிகள் அதிகரித்தன என்றே கருதுகிறேன்."

### தி. மு. க. அமைப்பாளர் கூறுவது

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தெள்ளுற்காடு மாவட்ட அமைப்பாளர் சாட்சியமளிக்கையில் சிறையதிகாரிகள் தம்மை 10 அல்லது 12 தடவைகள் வரை தாக்கியதாகக் கூறினார்.

### வேளவேந்தன் சாட்சியம்

முன்னாள் தி. மு. க. சட்ட சபை உறுப்பினர் திரு. வேழவேந்தன் விசாரணைக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் சிறையதிகாரிகள் தி. மு. கவின் செல்வாக்கைக் குறைத்து காங்கிரஸாரின் நல்லபிப்பிராயத்தைப் பெறுவதற்காகவே இவ்விதம் வன்முறையைக் கையாண்டனர் எனத் தாம் கருதுவதாகத் தெரிவித்தார்.

விசாரணைக் கமிஷன் விசாரணைகளைத் தொடர்ந்து நடத்துகிறது. (உ)

## தேர்தல் கலவரம்: 14பேர் பலி

கொழும்பு, வியா

வெக்கிராவையில் நேற்றிரவு இடம்பெற்ற தேர்தல் கலவரங்களை அடுத்து ஒருதர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையுண்டவரை இன்னும் எவரும் அடையாளம் காணவில்லை.

இக்கொலையுடன் இதுவரை தேர்தல்கலவரங்களில் இறந்தோர் தொகை 14ஆக உயர்ந்துள்ளது. (இ)

## ஐ.நா.வில் வியட்நாம்?

நியு யோர்க், ஜூலை 21

வியட்நாமை ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு அங்கத்துவநாடாக அங்கீகரிப்பதற்கு ஐ. நா. பாதுகாப்புச்சபை ஏகமனதாகச்சிபார்சு செய்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 20-ம் திகதி ஐ. நா. பொதுச்சபை கூடவிருக்கிறது.

ஐ. நா. வின் 149-வது அங்கத்துவ நாடாக வியட்நாம் சேர்த்துக் கொள்ளப்படுவது பொதுச்சபையில் உறுதி செய்யப்படும் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

## பாஸ்போர்ட் காரியாலயத்தில் திருட்டு!

கொழும்பு, வியா.

கொழும்பு பாஸ்போர்ட் விநியோகம் செய்யும் ஆபீஸில் பல தஸ்தாவேஜுகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றது.

இந்த ஆபீஸில் உள்ள கதவுகள் பலாத்காரமாக திறக்கப்பட்டு அங்கிருந்த ஐந்து இரும்புப் பெட்டிகளில் இருந்த தஸ்தாவேஜுகள் திருடப்பட்டுள்ளனவாம்.

இதன் காரணமாக நேற்றுக்காலையில் 'பாஸ்போர்ட்' வழங்கும் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

'பாஸ்போர்ட்' உறுதிப்பத்திரங்கள் அடங்கிய பைல்களே திருட்டுப் போயுள்ளன.

இந்த ஆபீஸ் அருகே நித்திரை செய்து கொண்டிருந்த எட்டுப்பேரை பொலிசார் அழைத்துச்சென்று விசாரணை நடத்தினர்.

மாலை பாஸ்போர்ட்டுகள் வழங்கப்பட்டன. (இ)


நிகாடோ பப்படம்

தரத்தில் சிறந்தது. சுவையில் மணத்தில் நிகரற்றது
100 க்கு 70% வீதம் திறமான உழுந்தில் தயாரிக்கப்பட்டது

நிகாடோ பப்படம்

கல்யாண மண்டபங்கள், விருந்துகள், ஹோட்டல்கள் போஜனசாலைகள் முதலிய இடங்களில் பரிமாறும் அறுசுவைப் பதார்த்தங்களுக்கு சிகரம்போல் விளங்குவது

எங்கள் சுத்தமான, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

நிகாடோ பப்படம்

இன்றே வாங்கி இன்புறுங்கள்.

மற்றும் எங்கள் போஷாக்குத் தயாரிப்புகள்

- நியு நிகாடோ அம்மாமி பப்படம்
- மங்கல பப்படம்
- நிகாடோ மோர் மிளகாய்
- நிகாடோ விஞ்கிரி
- நிகாடோ தக்காளி சோஸ்
- நிகாடோ மிளகாய் சோஸ்

முதலியன

நிகாடோ பப்படம் ரிஜிஸ்டர் இல; 37174

நிகாடோ அம்மாமி பப்படம் ரிஜிஸ்டர் இல: 37175

நிகாடோ டிரேடிங் கம்பெனி
647, பண்டாரவத்தை
கடவத்தை
தொலைபேசி; 0783—285



உங்கள் விவசாய பயிர்களை பாதுகாத்து தீங்கிழைக்கும் பூச்சி பொடுக்களை இல்லாதொழிப்பது......



பக்ஸ்

அல்லும் பகலும் அயராதுழைத்து நீங்கள் உண்டு பண்ணிய விவசாயப் பயிர்களிலிருந்து மேலான சிறந்த பயன்பெற அழிவுண்டாக்கும் பூச்சி புழுக்களிலிருந்து அவற்றைப் பாதுகாருங்கள்.

மிளகாய்ச் செடிச் சுருள், அவரை, ஈரவெங்காயம், புகையிலை, காய்கறி, அன்னுசி முதலிய வற்றிலிருந்து சிறந்த வருவாயைப் பெற பாவியுங்கள் சர்வதேச புகழ்பெற்ற — பக்ஸ்

சர்வதேச செவ்ரேன் கம்பெனியின் இரசாயனத் தயாரிப்பு பஸ் 30J'
உற்பத்தியாளர்: மொணிடர் 600'

ஹரிசன்ஸ் அன்ட் குரொஸ்பீல்ட் (கொழும்பு)
டார்லி ரோட், கொழும்பு —10.

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி நடித்த
ஹரிச்சந்திரா

மனோகரா தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] ரவிச்சந்திரன் - ஜெய்சித்ரா
அக்கரைப்பச்சை
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர்—லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

சாந்தி யாழ். நகர் தினசரி 10-30, 2-30,
போன்: 7642 6-30, 9-45
எம். ஜி. ஆர். - பத்மினி - நம்பியார்
ராணி சம்யுக்தா

வின்ஸர் சிவராம், கீதாஞ்சலி,
(யாழ்ப்பாணம்) தர்மலிங்கம், ஸ்ரீதேவி
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

REGAL Daily: at 4-45,
(JAFFNA) 7-00 & 9-30 p. m. only
NORMAN WIDOM IN
"ON THE BEAT"
FULL COMEDY

79-வது நாள்
ராணி எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா 76-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார்— ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ தினசரி 10-30, 2-30,
போன்: 7693 6-30, 9-45
(யாழ். நகர்)
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் சிவாஜி - பத்மபிரியா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - சகுந்தலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
WOMAN'S WORLD
From Tomorrow
CRAZY BOYS and
THE QUEEN'S NECKLACE

## வரி விளம்பரம்

### தேவை

மானிப்பாயிலுள்ள உருக்குத்தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகளும் வேலை பழகுபவர்களும் தேவை. விபரங்களுக்கு:- ஸ்ரார் உருக்குத் தொழிற்சாலை, மானிப்பாய். 6700

### விற்பனைக்கு

"ஐக்கிய தேசியக் கட்சியின் பெருவெற்றியும், ஆட்சியிலே கிரகங்களின் அனுகூலங்களும்" ஜோதிஷ விஞ்ஞானம் (Astrological Science), எண் ஜோதிடமும், அதிர்ஷ்ட விஞ்ஞானமும். நூலாசிரியர் - பரமாத்மஜோதி (ஸ்ரீ சத்யதாஸன்) எந்திரவியல் விரிவுரையாளர், காங்கேசன்துறை. 6692

உருக்கி வார்த்த ஸ்ரார் மார்க் அலுமேனிய பொருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. ஓடர்களுக்கும் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு ஸ்ரார் உருக்குத் தொழிற்சாலை, மானிப்பாய். 6701

### பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு; இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 6686

மத்திய கிழக்கு நாடுகளிலும் கப்பல்களிலும் வேலைகள் பெற ஏற்ற பயிற்சிகள், கல்வி அமைச்சினால் தொழிற்பயிற்சி நிலையமென அங்கீகாரம் பெற்ற இலங்கையின் ஒரே பயிற்சிநிலையம். NIET, வெல்டிங் (Electric and Gas) இலெக்ரிக் வயரிங், றேடியோ (Transistor) Motor Mechanism, City and Guilds (Electrical) P.M.G. (Special) Certificate பகல் - இரவு வகுப்புகள். National Institutes, மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6610

### மாந்திரீகம்

கணவன்-மனைவி பிணக்கா? காதலா? பரீட்சையா? தொழிலா? வியாபாரத் தடையா? கிரகதோஷமா? எதிரிகள் தொல்லையா? விவாகத் தடையா? செவ்வாய் தோஷமா? உங்கள் கைரேகை பலன் அறியவேண்டுமா? ஆண்கள் வலது கை பெருவிரல் அடையாளத்தையும், பெண்கள் இடது கை பெருவிரல் அடையாளத்துடன் பிறந்த வருடம், மாதம், திகதியைக் குறிப்பிட்டு அல்லது குறிப்புடன் 5 ரூபாயுடன் அனுப்பினால் உங்கள் முக்கால பலனையும் அறியத்தரலாம். மட்டக்களப்பு குமாரசண்முகம், கண்ணன் மருந்துச்சாலை, இணுவில். 6681

## வழமைபோல் தபால் சேவை

(கொழும்பு)

இன்றும் நாளையும் பொது விடுமுறையாக இருந்த போதிலும் தபால், தந்தி சேவைகள் வழமைபோல் இயங்கும் என தபால் அமைச்சு அறிவித்துள்ளது. (இ)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - பத்மினி
ராஜபக்தி



வேலர்: தேர்தல் முடிவு கேட்டு மயங்கி விழுந்த வேட்பாளரை ஒரு சக்தியாலும் எழுப்ப முடியாமல் போச்சு... கடைசியாக நானொரு மந்திரம் காதில் ஜெபித்தன் ஆள் சிரித்துக்கொண்டு எழும்பி விட்டுது.

மயிலர்: என்ன மந்திரம் சொன்னனி.

வேலர்: "ஐந்து வருஷத்திற்குப்பிறகும் ஒரு தேர்தல் உண்டு என்று சொன்னேன்" ஆள் சிரித்துக் கொண்டு எழும்பி விட்டுது.

—சுந்தர்

சிந்தெட்டிக் கற்பூரம்
பெட்டிகளில்
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் ரோட்டுத் தெற்கு,
கொழும்பு - 10
போன்: 24261-5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

கதிரவேலு சுந்தரலிங்கம், பண்ணாகம் தெற்கு சுழிபுரம்.
இல. MB/1100 எதிராக —வழக்காளி

1. மாரிமுத்து தம்பையாவும்
2. பெண் சின்னம்மாவும் இருவரும் கேணிக்கடவை தொல்புரம், சுழிபுரம்.

மல்லாகம் மாவட்டத்தின் MB/1100-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணிகளை 1977-ம் ஆண்டு யூலை மாதம் 28-ம் திகதி (28-07-1977) வியாழக்கிழமை முற்பகல் 10மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 3810/-ம் 5-3-76 தொடக்கம் 18-6-76 வரைக்கும் ரூபா 2500/-க்கு, 12வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 605/75 இதில் செலவில் ரூபா 200/- கொடுபட்டமையாலும்,

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோவிற்பற்று தொல்புரம் இறை "கொட்டைபடி வளவு" நிலப்பரப்பு 1 ஒன்றும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு கந்தன் கணபதிக்கும் பங்காளருக்கும் உரிய காணி வடக்கு கையொழுங்கையும் எல்லுப்போலை கிருஷ்ணனின் காணியும்: மேற்கு இத்தனியன் கந்தனின் காணியும், தெற்கு அருணசலம் திருநாவுக்கரசுவின் உரிமைக்காரரின் காணி. இதடங்கலும் மேற்கேயிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் தூர்வை வழிவாய்க்காலும் பாவிப்புரித்தும் வடக்கேயிருக்கும் கையொழுங்கையில் அரை வாசிப்பாவிப்புரித்தும்.

2. மேற்படி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை "கொட்டையடியும் இயட்டப்பாயும்" நிலப்பரப்பு இலாச்சம் 3¼ மூன்றேகாலும் இதில் கிழக்குப் புறமாகப் பரப்பு நில. இலாச்சம் 1½ ஒன்றரையும் வான் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு மாரிமுத்து கந்தனுக்குரிய ஆதனம், வடக்கு இக்காணிக்கும் இருகாணிக்கும் உரிய கையொழுங்கை மேற்கு இதன் மிகுதி ஆதனம் தெற்கு சரவணை நாகலிங்கத்துக்குரிய ஆதனம் இதடங்கலும் வடக்குப்பக்கமாக இன்னையா கைம்பெண் பகவதிப்பிள்ளைக்குரிய காணியிலிருக்கும் கிணற்றிற் பங்கும் தூர்வைப் பங்கும் குறித்த வடக்கெல்லை ஒழுங்கையால் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

நாகேந்திரமடம்
வட்டுக்கோட்டை
23.6.1977

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்
6699

### 33 - புலத்சிங்கள

ஏ. எஸ். பெரேரா (ஐ தே க) 20,518
மங்கள முனசிங்க (ஸ்ரீ ல சு க) 16,089
சரத் ரணவக்க (ல ச ச க) 3,905
பெரும்பான்மை 4,428

### 67- ஹபரதுவ

சுமதிரத்ன (ஐ.தே.க) 20,354
சரத்விக்ரம டயஸ் (ஸ்ரீ. ல. சு. க) 15,855
ஜோர்ஜ் ரத்ஞயக்க (கம்யூனிஸ்ட்) 4,475
பெரும்பான்மை 4,499

### 138- வெலிமடை

பேர்ஸி சமரவீர ஐ.தே.க. 16,314
ஆர்.எம்.பண்டார ஸ்ரீ.ல.சு.க. 8,633
பி.எம்.பண்டா சுயே 386
விஜேசிங்க ம.ஐ.மு. 106
பெரும்பான்மை 7,681

### 07-இரத்மலானை

லலித் அதுலத்முதலி (ஐ தே க) 19,972
குணரத்ன (ஸ்ரீ ல சு க) 12,141
விவியன் குணவர்த்தன (ல ச ச க) 3,055
பெரேரா (சுயே.) 108
பெரும்பான்மை 7,831

### 39-மாத்தளை

அலிக் அலுவிகாரை (ஐ தே க) 21,945
சந்திரசேன முனவீர (ஸ்ரீ ல சு க) 9,039
கருணாரத்ன (சுயே.) 361
பெரும்பான்மை 12,906

## கட்டுப்பணம் இழந்தனர்

மானிப்பாய்த் தொகுதியில் திரு வி. தர்மலிங்கத்துடன் போட்டியிட்ட மூவரும் கட்டுப் பணம் இழந்தனர்.

சாவகச்சேரித் தொகுதியில் திரு. வ. ந. நவரத்தினத்துடன் போட்டியிட்ட நால்வரில் ஒருவரைத்தவிர மற்றும் மூவரும் கட்டுப்பணம் இழந்தனர்.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் திரு. கா. பொ. இரத்தினத்துடன் போட்டியிட்டவர்களில் திரு. வி. நவரத்தினத்தைத்தவிர அனைவரும் கட்டுப் பணம் இழந்தனர்.



பருத்தித்துறையில் திரு.க. துரைரத்தினத்துடன் போட்டியிட்ட இருவரைத் தவிர மற்றைய வேட்பாளர்களான இருவர் கட்டுப் பணமிழந்தனர்.

முல்லைத்தீவில் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவுடன் போட்டியிட்டவர்களிலும் இருவர் கட்டுப்பணமிழந்தனர்.

## ஆள்மாறாட்டம் செய்தனராம்!

நேற்று மாலை விடுக்கப்பட்ட பொலிஸ் அறிக்கையின்படி, நாட்டின் நாலா பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் எதுவுமே இடம்பெறவில்லை என்றும் தேர்தல் வாக்களிப்பு மிகவும் அமைதியான சூழ்நிலையில் நடந்தது என்றும் சில இடங்களில் மட்டும் ஆள் மாறாட்டம் நிகழ்ந்தது என்றும் நேற்றுப் பகல் வரை இது சம்பந்தமாகப் பத்துப் பேர் பொலிஸாரின் நடவடிக்கைகளில் சிக்கிக்கொண்டனர் என்றும் தெரியவருகிறது.

### 130 மெதிறிகிறிய

டி. பி. எகநாயகா ஐ. தே. க. 13,843
யசரத்னதென்னக்கூன் ஸ்ரீ ல சு க 9447
தனபால சுயே 458
ஜயவிக்ரம சுயே 433
கங்கேவல ல. ச. ச. க. 240
பெரும்பான்மை 4396

### 3 பொரளை

எம். எச். மொகமட் [ஐ தே க] 19,824
டக்ளஸ் பெரேரா [ஸ்ரீல சு க] 9,812
குருகுலசூரிய [ல ச ச க] 2,304
குருகே [சுயேச்சை] 88
பெரும்பான்மை 10,012

### 124-அனுராதபுரம் (கிழக்கு)

டபிள்யு. வை.ஹெரத் (ஐ.தே.க.) 13,948
கே. பி. இரத்நாயக்க (ஸ்ரீ.ல.சு.க.) 12,066
கே. ஈ. சில்வா (ல.ச.ச.க.) 531
பெரும்பான்மை 1,882

### 129 மின்னேரியா

மெறில் டி. சில்வா [ஐ தே க] 14,513
ரத்னதேசப்பிரிய சேனநாயகா [ஸ்ரீல சு க] 9,930
பேர்சி விக்ரமசேகர [ல ச ச க] 263
வத்தேகெதர [சுயேச்சை] 131
உடகெதர (சுயேச்சை) 98
பெரும்பான்மை 4,583

### 58-பலப்பிட்டி

நோர்மன் வைத்தியரத்ன (ஐ தே க) 13,745
வீரசிங்க டி சில்வா (ல ச ச க) 6,803
லக்ஷ்மன் டி சில்வா (ஸ்ரீ ல சு க) 4,556
சுதர்மன் டி சில்வா (சுயேச்சை) 343
அபயசேகர (சுயே.) 156
அலங்கார (சுயே.) 128
பெரும்பான்மை 8,942

### 64-ரத்கம

எட்வின் திலகரத்தன (ஐ தே க) 32,486
எம். ஜி. மெண்டிஸ் (கம்யூனிஸ்ட்) 15,734
எம். பீ. டி. சொய்ஸா (சுயேச்சை) 3,149
பண்டிதரத்ன (சுயேச்சை) 446
பெரும்பான்மை 6752

### 06-தெஹிவளை

எஸ். டி. எஸ்.ஜயசிங்க (ஐ தே க) 22,364
அல்பிரட் பெரேரா (ஸ்ரீ ல சு க) 9,996
பிரேமசிங்க [ல ச ச க] 3,578
உபாலிகூரே [சுயே.] 402
பெரும்பான்மை 12,368

### 125 - அனுராதபுரம் மேற்கு

கே. டி. எம். சி. பண்டார ஐ. தே. க. 13,902
சேமசிங்க ஸ்ரீ ல. சு. க. 11,087
சந்திரபால சுயே. 797
முதியான்சே கம்யூ. 354
பெரும்பான்மை 2815

### 05 - கொழும்பு மேற்கு

ஜே. ஆர். ஜெயவர்த்தனு ஐ. தே. க. 21,707
சந்திரலால்கால்கோட 3,769
விஜேசிங்க ல. ச. ச. க. 1803
அஷோக் தய்ரோ சுயே 70
நவரத்ன சுயே. 53
பெரும்பான்மை 17,938

### 131-பொலன்நறுவ

நெல்ஸன் (ஐ தே க) 14,941
விஜேசிங்க [ஸ்ரீ ல சு க] 9,926
ஷெல்டன் மொறயஸ் (சுயேச்சை) 219
விபுலசேன [சுயே.] 120
அருணேலிஸ் அப்பு [சுயேச்சை] 62
தயாவன்ச (சுயே.) 37
விமலசேகர [சுயே.] 32
பெரும்பான்மை 5015

### 74- வெலிகம

மொண்டேகு ஜயவிக்ரம (ஐ தே க) 25,440
எஸ். தஹநாயக்க [ஸ்ரீ ல சு க] 16,343
ரத்னவீர [கம்யூ] 3,560
பெரும்பான்மை 9,097

### 73 - மாத்தறை

எஸ். கே. பியதாச ஐ. தே. க. 23,222
பி. வை. துடாவை கம்யூ. 12,585
பந்துல அபேசூரிய ஸ்ரீ ல. சு. க. 4853
அபேசிங்க சுயே. 523
ஹெற்றியாராச்சி சுயே. 201
பெரும்பான்மை 10,637

### 133-வியலுவ

சமரவீர ஐ தே க 9,804
எட்வின் விக்ரமரத்ன ஸ்ரீ ல சு க 8,673
ராஜபக்ஷ சுயே. 241
பெர்னாண்டோ ல ச ச க 107
கருணதிலக சுயே. 47
பெரும்பான்மை 1131

### 48-செங்கடகலை

ஷெல்டன் ரணராஜா ஐ தே க 17,972
அனுருத்த ரத்வத்தை ஸ்ரீ ல சு க 12,381
விக்ரமரத்ன ல ச ச க 985
பெரும்பான்மை 5591

## வதந்தியோ வதந்தி!

நாட்டின் பல தொகுதிகளில் நேற்று முன் தினமிரவு மேற்கொள்ளப்பட்ட 'கடைசிநேர முயற்சி'கள் பற்றி பலவித ரூபத்தில் வதந்திகள் அடிபட்டன. 'நைலக்ஸ்' சேலைகள் வழங்கப்பட்டு, கைமாறுவதற்கு முன்னரே அவை உடனடியாக பிடிபட்டு, இம் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்றும்; வழங்கப்பட்ட சில சேலைகள் கூட 'கரை' சரியில்லை என்று திருப்பப்பட்டன என்றும், 'போத்தல்'கள் தாராளமாக உருண்டன என்றும் வதந்திகள் பரவலாக அடிபட்டன!

## பாதுகாப்பில் பல லொறிகள்

தனியாருக்குச் சொந்தமான வாகனங்களில் தேவைக்கு அதிகமானவர்களைக் கூட்டிச் சென்ற சில கார்ச் சாரதிகள் இன்று பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டனர்.

இன்று பிற்பகல், பொலிஸார் மேற்கொண்ட தேர்தல் நடவடிக்கையின் எதிரொலியாக, அதிகமான நபர்களை ஏற்றிச் சென்ற ஏராளமான லொறிகள், வான்கள் இன்று பிற்பகல் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டன. சாரதி, கிளீனர் மற்றும் ஒரு சகபிரயாணி என்று மூன்றுக்கும் அதிகமானவர்களை ஏற்றிச் சென்ற இந்த 'லொறி'கள் பொலிஸாரின் கடுமையான கண்காணிப்புக்குள்ளாகின.

சந்தேகத்துக்கிடமான சில லொறிகள், பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

## புகார்மீது! நடவடிக்கை

யாழ்ப்பாணத்தொகுதியிலுள்ள ஒரு வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர்மீது தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்து, அவர் உடனடியாக அந்த வாக்களிப்பு நிலையத்திலிருந்து யாழ். பொலிஸ் நிலையத்துக்குத் திருப்பி அழைக்கப்பட்டார். இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் நடந்தது.

### 114 பிங்கிரியா

சிறிசேன ஐ.தே.க. 21007
பிரேமச்சந்திர ஸ்ரீ.ல.சு.க. 17,620
பெரும்பான்மை 3,387

### 17 மஹர

தியூடரி குணசேகர ஐ.தே.க 25,016
சூரியாராச்சி ஸ்ரீ.ல.சு.க. 22,384
பெரேரா கம்யூ. 9,035
கருணவன்ச சுயேச்சை 101
மத்துமகே சுயேச்சை. 98
பெரும்பான்மை 2631

### 38-லக்கல

விஜேரத்ன பண்டார [ஐ தே க] 13,064
எம். வி. கோபல்லாவ [ஸ்ரீ ல சு க] 10,254
ரணசிங்க [சுயே.] 215
கருணாரத்ன [சுயே] 214
பெரும்பான்மை 3395

### 110-யாப்பஹுவ

அபேரத்ன [ஐ தே க] 22,189
எகநாயக்க [ல ச ச க] 16,379
பெரும்பான்மை 5,810

### 134 பசறை

கருணாரத்ன (ஐ தே க) 10,451
செனிவிரத்ன (ஸ்ரீல சு க) 5,993
திஸநாயக்கா (சுயேச்சை) 402
ரத்நாயக்கா (சுயேச்சை) 362
பீரிஸ் விமலசூரிய [சுயேச்சை] 186
புஞ்சிபண்டா (சுயேச்சை) 95
பெரும்பான்மை 4,458

### 51 உடுநுவர

விஜயதுங்க (ஐ தே க) 21,766
சேனநாயக்கா (ஸ்ரீல சு க) 11,013
பியசேன (கம்யூ) 360
ஹிப்பொல (சுயேச்சை) 56
பெரும்பான்மை 10,753

### 1–கொழும்பு வடக்கு

வின்சன்ட் பெரேரா [ஐ தே க] 26,759
ஏ.எச். எம்.பௌஸி [ஸ்ரீ ல சு] 11,617
ஹுபேர்ட்பெரேரா [ல ச ச க] 1,321
விஜேசிங்க [சுயே.] 193
மல்லவராச்சி [சுயே.] 45
ஆரியதாச [சுயே.] 42
பெரும்பான்மை 15,142

### 56 ஹங்குராங்கெட்ட

அபயகுணசேகரா (ஐ தே க) 17,750
உந்தென்ன (ஸ்ரீல சு க) 10,750
விஜயக்கோன் (சுயேச்சை) 499
திஸநாயக்கா (கம்யூனிஸ்ட்) 422
கருணதிலக [சுயேச்சை] 175
குணசேகரா [சுயேச்சை] 121
பெரும்பான்மை 7,000

### 117 தம்பதெனியா

விஜயக்கோன் [ஐ தே க] 26,089
தட்டேவ [ஸ்ரீல சு க] 18,232
வைத்தியரத்ன [சுயேச்சை] 1,071
பெரும்பான்மை 7,857

### 111 இரியல்ல

எஸ். பி. ஹேரத் (ஐ தே க) 25,220
தித்தவெல [ஸ்ரீ ல சு க) 13,938
மோகனலால் குணதிலக [சுயேச்சை] 576
திஸநாயகா (சுயே.) 234
பெரும்பான்மை 11,282

### 140-ஹப்புத்தளை

லொக்குபண்டா [ஐ தே க] 10,818
திஸநாயகா [ஸ்ரீ ல சு க] 7,446
குணவர்த்தன [ல ச ச க] 274
ஹேமதாஸ [சுயே.] 225
பெரும்பான்மை: 3372

### 78 திஸ்ஸமாரகம

சிறில் [ஐ தே க] 20,879
ராஜபக்ஷ [ஸ்ரீ ல சு க] 13,109
திதிரிசூரிய [சுயே.] 5206
பெரும்பான்மை 7770

## தொடங்கஸ்லந்தை

ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த எச் டபிள்யு. அலவத்துகொட 4600 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினார்.

### 132 மஹியங்கனை

செனிவரத்ன (ஐ தே க) 14,105
கல்கெட்டிய (ஸ்ரீ ல சு க) 5,3004
ஹேரத் (சுயேச்சை) 257
அப்புஹாமி பேரபாலை (சுயேச்சை) 188
கொடிபிலி (ல ச ச க) 74
பெரும்பான்மை 8,801

### 72 தெனிநுவர

ரொனி டி மெல் (ஐ தே க) 23,776
டிக்ஸன் (ஸ்ரீ ல சு க) 14,337
விஜயசேகர (சுயேச்சை) 4463
விஜயசூரிய (சுயேச்சை) 198
பெரும்பான்மை 9439

### பியகம – 19

ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர் ரெனன்விக்கிரமசிங்க 6769 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினார்.

### கடுவெல 23

ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த எம். டி. எச். ஜெயவர்த்தனு 11,795 பெரும்பான்மைவாக்குகளால் வெற்றி பெற்றார்.

## சிறிமாவோ வெற்றி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப்பொறுத்தவரை பிரதமரும், கட்சியின் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டார



நாயக்கா பத்தாயிரம் அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகா 366 பெரும்பான்மை வாக்குகளால்தான் வெற்றி பெற்றுள்ளார்.

## என். எம். தோல்வி!



லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா எட்டியாந்தோட்டை தொகுதியில் 2000 வாக்குகள் வித்தியாசத்தில் ஐ. தே. கட்சி அபேட்சகரிடம் தோல்வியடைந்துள்ளார். பிரதி தபால் அமைச்சர் திரு. வி. பீ. கருணாரத்தினவும் றக்குவானை தொகுதியில் தோல்விகண்டுள்ளார்.

ஈழநாடு
EELANADU

# நல்லூர் சிவாவுக்கே மிகப் பெரும்பான்மை!

## ராஜலிங்கம் அமோக வெற்றி
## சபாநாயகர் ஸ்ரான்லி தோல்வி!

யாழ்ப்பாணம், வெள்ளி

நடந்துமுடிந்த தேர்தலில், கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரமே வடக்கு கிழக்கில் ஆகக் கூடுதலான பெரும்பான்மைவாக்குகளைப் பெற்றுள்ளார்!



மைத்திரி

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை (காலை எட்டு மணி) வெளிவந்த தேர்தல் முடிவுகளில் முழுஇலங்கையிலுமே திரு. மு. சிவசிதம்பரம் தான் கூடுதல் வாக்குகளைப் பெற்றவராகும். இருபத்தெட்டாயிரம் அதிகப்படியான வாக்குகளால் இவர் நல்லூர்த் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தேர்தலில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சம், உடுப்பிட்டித் தொகுதியில் திரு. கே. இராஜலிங்கம் 14,000 க்கும் அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்றிருப்பதாகும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியைப் பொறுத்தவரை, உடுப்பிட்டித்தொகுதியில் திரு. கே. இராஜலிங்கம் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற வேண்டும் என்று எதிர்பார்த்திருந்ததும், உடுப்பிட்டித் தொகுதியில் அவர் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவதன் மூலம் கூட்டணியின் ஐக்கியம் மேலும் பலப்படுத்தப்படுவதுடன், கூட்டணியின் ஒரு இலட்சியம் பூர்த்தி பெறுகிறது என்றும் கருதியிருந்தது.

### கடுமையான தோல்வி

பொதுத்தேர்தலில் மற்றுமொரு அம்சம், சிரேஷ்ட அமைச்சர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க பலரும் தோல்வி அடைந்தது. லங்கா சமசமாஜக்கட்சி பரவலாக அதிமான தொகுதிகளில் போட்டியிட்டும் (இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை) ஒரு தொகுதியையேனும்கைப்பற்றவில்லை! அது மட்டுமின்றி மிகவும் குறைந்த வாக்குகளையே எல்லாத தொகுதிகளிலும் பெற்றிருந்தது.

திரு டி.பி இலங்கரத்னவின் துணைவியார் திருமதி தாமரகுமாரி இலங்கரத்ன பெரும் தோல்வி அடைந்துள்ளதுடன் அமைச்சர்கள் குரியாராய்ச்சி, செ. குமாரசூரியர், கே. பி. இரத்நாயக்கா ஆகியோர்



ஹாருள்ளே

குறிப்பிடத்தக்கவர்கள். அதே நேரத்தில் கடந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் போட்டியிட்ட அமைச்சர்களாக இருந்து பலரும் வெற்றிபெற்றுள்ளனர். முன்னை போககுரைத்து அமைச்சர் திரு. ஹாருள்ளே இம்முறை வெற்றிபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

### சுபசிங்கா தோல்வி

முன்னாள் கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சரும், இடதுசாரி ஐக்கியமுன்னணியின் தலைவருமான ரி. பி. சுபசிங்க கட்டுப்பொலதொகுதியில் 6,365வாக்குகளைபெற்று தோல்விகண்டுள்ளார்.

### ஸ்டான்லி, லக்ஷ்மன் தோல்வி

மகரகமத் தொகுதியில் திரு. ஸ்டான்லி திலகரத்ன, ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகரிடம் 6,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்விகண்டுள்ளார். திரு. ஸ்டான்லி திலகரத்ன கலைக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகராக இருந்தது குறிப்பிடத்தக்கது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடியும் [திவுலப்பிட்டிய தொகுதியில்] தோல்வியடைந்துள்ளார் தேசியஅரசுப்பேரவையில் ஒரு குறிப்பிடத்தக்க பேச்சாளராக விளங்கிய கம்பளை முன்னாள் எம். பி திரு தி. மு. ஜயவர்த்தன ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகரிடம் தோல்வி கண்டுள்ளார்.



லங்கா சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த திரு. பேர்னாட் டி செய்ஸா கொழும்பு கிழக்குத் தொகுதியில் தோல்வி பெற்றுள்ளார். இங்கு ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

கேகாலைத் தொகுதியில் திரு. பி. பி. ஜி கலுகல்லை இரண்டாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளார். இத்தொகுதியில் ஐக்கியதேசியக்கட்சி வெற்றி பெற்றுள்ளது



### கட்சி நிலை

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 133 |
| தமிழர் விடுதலை கூட்டணி | 16 |
| சிறி லங்கா சுதந்திரக் கட்சி | 04 |
| லங்கா சம சமாஜக்கட்சி | |
| கம்யூனிஸ்ட் கட்சி | |
| சுயேச்சை | |

## இலங்கைதேர்தல் பற்றி பி. பி. ஸி.!

லண்டன், ஜுலை 22

இலங்கை பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளது என்று பி. பி. ஸி. வானொலி இன்று தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

''இலங்கை தேசிய அரசுப்பேரவையில் எதிர்க்கட்சியாக உள்ள ஐக்கிய தேசியக்கட்சி நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் எவருமே எதிர்பார்க்காத வகையில் ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டு வருகிறது. இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி இக்கட்சி ஆளும்கட்சியை கடுமையாகத் தோற்கடித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் இப்பெரு வெற்றிக்கு புதிய கொள்கையை அவர் அறிவித்திருப்பதே காரணமாகும்'' என்று பி. பி. ஸி. வானொலி தனது (இன்றைய) செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளது.

## நாட்டில் வறுமை நீங்க பூரணமதுவிலக்கு வேண்டும்

### தமிழக ஆளுநர் கூறுகிறார்

சென்னை, ஜுலை 22

'நாடு முழுவதும் பூரண மதுவிலக்கை அமுல் நடத்துவதற்குரிய தருணம் இது' என்று தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி கூறினார்.

சென்னையில் நடைபெற்ற மதுவிலக்குச் சபையின் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆளுநர் பேசுகையில் மேலும் கூறியதாவது: 'நாட்டில் வறுமையை அகற்றுவதற்கு மது விலக்கு பூரணமாக அமுல் நடத்தப்பட வேண்டியது மிகமுக்கியமானது.

தாழ்வுற்ற நிலையில் உள்ள மக்களின் நலனில் உண்மையான அக்கறை இருக்குமானல் மது விலக்கு பூரணமாக அமுல் நடத்தப்படுவதில் அக்கறை காட்டப்பட்டே தீரவேண்டும்.

இரண்டு வேளை உணவு உண்ண முடியாத லட்சக் கணக்கான ஏழை மக்கள் குடிப்பழக்கத்தைக் கொண்டிருப்பது ஆடம்பர செலவாகவே கருதப்படும்.

தமிழ்நாடு மதுவிலக்கு விஷயத்தில் முன்மாதிரியாகத் திகழ்ந்து வந்துள்ளது.

கர்மவீரர் காமராஜர், அறிஞர் அண்ணாத்துரை வழியில் இம்மதுவிலக்குத் தொடர்ந்து அமுல் நடத்தப்பட வேண்டும்.

**துணிவுடன் ஆதரிப்பவர் எம். ஜி. ஆர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மது விலக்குக் கொள்கையைத் துணிவுடன் ஆதரிப்பவர் எனவே மதுவிலக்கு தமிழ் நாட்டில் துரிதமாகவும் பூரணமாகவும் அமுல் நடத்தப்படும் என்று இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### கொப்பேகடுவ தோல்வி

திரு. கொப்பேகடுவ சுமார் இரண்டாயிரம் வாக்கு வித்தி



யாசத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகரிடம் தோல்வி பெற்றுள்ளார்.

### 84 -- உடுப்பிட்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | | 36955 |
| த. இராசலிங்கம் | த. வி. கூ. | 18,768 |
| ஆர்.ஆர். தர்மரத்தினம் | சுயேச்சை | 4021 |
| கு. மோதிலால்நேரு | சுயேச்சை | 2,798 |
| எஸ். எஸ். சுந்தரம் | சுயேச்சை | 1478 |
| கே. சி மகாதேவன் | சுயேச்சை | 1188 |
| க. பிள்ளையினர் | சுயேச்சை | 517 |
| மா. துரைராசா | சுயேச்சை | 437 |
| பொ. கனகராசா | சுயேச்சை | 251 |
| எம். ஞானச்சந்திரன் | சுயேச்சை | 125 |
| | பதிவானவை | 29706 |
| | பழுதானவை | 123 |
| | அதிகப்படி | 14,747 |

### 98 -- பட்டிருப்பு

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 35909 |
| பூ. கணேசலிங்கம் | த. வி. கூ. | 15877 |
| எஸ். சிவகுருநாதன் | ல. ச. ச. க. | 5533 |
| எஸ். தம்பிராஜா | சு. க. | 5590 |
| பொ. இரத்தினசிங்கம் | ஐ. தே. க. | 5189 |
| பெரும்பான்மை | | 10,244 |

### 87 -- நல்லூர்

| | | |
|---|---|---|
| மொத்தவாக்காளர் | | 40205 |
| மு. சிவசிதம்பரம் | த. வி. கூ. | 29,858 |
| க. இராமநாதன் | சுயேச்சை | 1,721 |
| சி அருளம்பலம் | ச. க. | 1,042 |
| இராஜராஜேஸ்வரன் தங்கராசா | சுயேச்சை | 667 |
| சிவக்கொழுந்து சுப்பிரமணியம் | சுயேச்சை | 104 |
| | பதிவானவை | 33,529 |
| | பழுதானவை | 137 |
| | அதிகப்படி | 28,137 |

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜுலை மாதம் 22ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.